**காலாண்டு தேர்வுப் பகுதி**
**ஒரு மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் முதல் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**கோடிட்ட இடத்தை நிரப்புக**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 29**

**காலம் 45 நிமிடம்**

1. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் ................
2. மாணிக்கவாசகர் பாடல்கள் .................திருமுறையில் இடம்பெற்றுள்ளன.
3. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் .................உள்ளது.
4. மாணிக்கவாசகர் .................... தலைமையமைச்சராகப் பணியாற்றினார்
5. ஜி.யு.போப் திருவாசகத்தை .................... மொழியில் மொழிபெயர்த்தார்.
6. திருவாசகத்திற்கு உருகார் .............உருகார்.
7. கைதான் நெகிழ விடேன். இதில் நெகிழ என்பது ............என்னும் (தளர/தலர) பொருளில் வந்துள்ளது.
8. இறுவரை காணின் ............. தலை (கிழக்காம்/ கிளக்காம்)
9. மனவலிமையுடையோர் என்னும் பொருள் தரும் சொல் ................**(உறவோர்/ உரவோர்)**
10. இரட்டைக் காப்பியம் என்பன சிலப்பதிகாரமும் ...................ஆகும்..
11. நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் ................... பேரெல்லையும் கொண்ட நூல்.
12. அரி என்னும் சொல்லின் பொருள் .....................
13. கண்ணகனார் ...................அவைக்களப் புலவர்களுள் ஒருவர்.
14. புறநானூறு .............. நூல்களுள் ஒன்று.
15. போலிப்புலவர்கள் தலையில் குட்டுபவர் ..................
16. நால்வகைப் பாக்களும் வயலுக்கு .....................அமைந்துள்ளன.
17. தமிழர் மனித வாழ்வை ................... எனப் பிரித்தனர்.
18. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசியமொழி .................
19. 2004 ஆம் ஆண்டு ...............திங்களில் தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.
20. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் ................
21. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள .............ஒன்று உண்டு.
22. பெரியார் சமூக முரண்களையும் ...............................எதிர்த்தவர்.
23. வெறும் பேச்சுக்கும் ................பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.
24. பேச்சு முடிவில் ............... கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.
25. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் .................என அழைப்பர்.
26. படப்பிடிப்புக் கருவியை .................... பொருத்துவதும் உண்டு.
27. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு ..................... இருக்கும்.
28. இலெமூரியாவை .................நாகரிகத் தொட்டில் என்பர்.
29. தனக்குவமையில்லா ஒரு .................. தமிழ் இனம்.

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**ஒரு மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் முதல் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 23**
**காலம் 45 நிமிடம்**

1. மெய்தான்.........(அரும்பி / அறும்பி) விதிர்விதிர்த்துன் ....................................(விரையார் / விறையார்) கழற்கு.
2. கைதான் நெகிழவிடேன். இதில் நெகிழ என்பது.........................(தலர / தளர) என்னும் பொருளில் வந்துள்ளது.
3. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல்
   1. நால்வர் நான்மணிமாலை 2. திருவள்ளுவமாலை 3. இரட்டைமணிமாலை
4. திருக்குறள் .................வெண்பாக்களால் ஆன நூலாகும்.
   1. சிந்தியல் 2. குறள் 3. நேரிசை
5. இணையில்லை முப்பாக்கு இந்நிலத்தே - எனப் பாடியவர்
   1. பாரதியார் 2. சுரதா 3. பாரதிதாசன்
6. இறுவரை காணின் ..............................(கிழக்காம் / கிளக்காம்) தலை.
7. மனவலிமையுடையோர் என்னும் பொருள் தரும் சொல்.......................(உரவோர் / உறவோர்)
8. ஏலாதி ...................................நூல்கள் ஒன்று.
   1. பதினெண்மேற்கணக்கு 2. பதினெண்கீழ்க்கணக்கு 3. காப்பியம்
9. கணிமேதாவியாரின் காலம்..........................
   1. கி.பி.மூன்றாம் நூற்றாண்டு 2. கி.பி. நான்காம் நூற்றாண்டு 3. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு
10. மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள்.....................,
    1. திருக்குறள், நன்னூல் 2. திரிகடுகம், ஏலாதி 3. நற்றிணை, அகநானூறு.
11. இளங்கோவடிகள்......................நாட்டைச் சேர்ந்தவர்.
    1.சோழ 2. சேர 3. பாண்டிய.
12. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர்...........................
    1. கவிமணி 2. பாரதிதாசன் 3. பாரதியார்
13. குடும்ப விளக்கு..................படைப்புகளுள் ஒன்று.
    1. பாரதியார் 2. பாரதிதாசன் 3. சுரதா
14. பாரதிதாசனார்......................... என அழைக்கப் படுகிறார்.
    1. புரட்சிக் கவிஞர் 2. தேசியக் கவிஞர் 3. உவமைக் கவிஞர்
15. கம்ப ராமாயணம்.................காண்டங்களைக் கொண்ட நூல்.
    1. ஐந்து 2. ஆறு 3. மூன்று
16. சரசுவதி அந்தாதி ...................................இயற்றிய நூல்கள் ஒன்று.
    1. கம்பர் 2. ஒட்டக்கூத்தர் 3. புகழேந்தி
17. கம்பரைப் புரந்தவர்..........................
    1. ஔவையார் 2. புகழேந்தி 3. சடையப்ப வள்ளல்.
18. நல் என்னும் அடைமொழி பெற்ற நூல்
    1.அகநானூறு 2. கலித்தொகை 3. நற்றிணை
19. நற்றிணையைத் தொகுப்பித்தவர்.........................
    பன்னாடு தந்த மாறன் வழுதி 2. இளம்பெருவழுதி 3. உக்கிரப் பெருவழுதி
20. நற்றிணை.................நூல்களைச் சார்ந்தது.
    1. பத்துப்பாட்டு 2. எட்டுத்தொகை 3. பதிணென்கீழ்க்கணக்கு
21. சேக்கிழார் பெருமாள் அருளியது..........................
    1. சிவபுராணம் 2. பெரியபுராணம் 3. தலபுராணம்
22. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப்பெயர் சூட்டியவர்.......
    1. அப்பூதியடிகள் 2. மாறநாயனார் 3. திருநீலகண்டர்
23. பக்திச்சுவை நனி சொட்ட சொட்டப் பாடிய கவிவலவ எனப் பாடியவர்..................
    1. பெ. சுந்தரனார் 2. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் 3. கவிஞர் வெ. ராமலிங்கனார்

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**ஒரு மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் முதல் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக / வினாவாக மாற்றுக**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 26**
**காலம் 45 நிமிடம்**

1. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர்...................
   1. திரு.வி.க 2. உ.வே.சா 3. பாவாணர்
2. இன்றைய மதுரையில்.................................தமிழ்ச்சங்கம் இருந்தது.
   1. மூன்றாம் 2. இரண்டாம் 3. முதலாம்
3. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர்
   1. திரு.வி.க 2. பெரியார் 3. பாரதிதாசன்
4. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று................இல்லை.
   1. வாக்குரிமை 2. பேச்சுரிமை 3. சொத்துரிமை
5. மும்பையில் அம்பேத்கர் சிறிதுகாலம்............................பேராசிரியராகப் பணியாற்றினார்.
   1. வாணிகவியல் 2. அறிவியல் 3. பொருளியல்
6. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது......................
   1. பத்மஸ்ரீ 2. பாரத ரத்னா 3. பத்ம விபூஷன்
7. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை.....
   1. ஓவியக்கலை 2. இசைக்கலை 3. பேச்சுக்கலை
8. மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர்..............
   1. பேரறிஞர் அண்ணா 2. மு.வரதராசனார் 3. திரு.வி.க
9. பண்ணொடு தமிழொப்பாய் எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல்..
   1. திருவாசகம் 2. திருக்குறள் 3. தேவாரம்

**வினாவாக மாற்றுக**

10. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
11. பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறுவிளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.
12. செய்திப் படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.
13. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளிஒலிப் படக்கருவி பயன்படுகிறது.
14. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.
15. தமிழர் மனித வாழ்வை அகம், புறம் எனப் பிரித்தனர்.
16. மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது.
17. தொடக்கம், இடைப்பகுதி, முடிவு பேச்சின் முக்கூறுகள்
18. உலக இலக்கியங்களில் முதன்மை பெற்றவை சங்க இலக்கியங்கள்
19. இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்
20. நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம்.
21. இலக்கணம் வகுத்தபின்பே இலக்கியம் தோன்றியது
22. தமிழர்கள் நிலத்தை ஆறுவகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
23. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைநத அரிய கலை பேச்சுக்கலை
24. உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன.
25. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இரு கண்களாக்க் கருதினார் எம்.ஜி.ராமச்சந்திரன்.
26. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமாகும்.

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**ஒரு மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் முதல் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**பொருத்துக**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 23**
**காலம் 45 நிமிடம்**

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 1. விரை | - | உடல் |
| 2. கழல் | - | பெருகி |
| 3. ததும்பி | - | மணம் |
| 4. மெய் | - | அணிகலன் |

| | | |
|---|---|---|
| 5. புகார்க் காண்டம் | - | 13 காதைகள் |
| 6. மதுரைக் காண்டம் | - | 7 காதைகள் |
| 7. வஞ்சிக் காண்டம் | - | 10 காதைகள் |
| | | 15 காதைகள் |

| | | |
|---|---|---|
| 8. இடர் | - | நிலவு |
| 9. நாவாய் | - | துன்பம் |
| 10. இறை | - | படகு |
| 11. இந்து | - | தலைவன் |

| | | |
|---|---|---|
| 12. செறு | - | பனையோலைப்பெட்டி |
| 13. வித்து | - | புதுவருவாய் |
| 14. யாணர் | - | விதை |
| 15. வட்டி | - | வயல் |

| | | |
|---|---|---|
| 16. மேதி | - | சிவன் |
| 17. சந்தம் | - | எருமை |
| 18. கோதில் | - | அழகு |
| 19. அங்கணர் | - | குற்றமில்லாத பசு |

| | | |
|---|---|---|
| 20. ஈஸ்ட்மன் | - | ஒருவர் மட்டும் பார்க்கும் கருவி |
| 21. எடிசன் | - | படச்சுருள் |
| 22. எட்வர்ட் மைபிரிட்சு | - | கருத்துப்படம் |
| 23. வால்ட் டிஸ்னி | - | இயக்கப்படம் |

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**ஒரு மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் இரண்டாம் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**உரிய விடை மற்றும் கோடிட்ட இடம் நிரப்புக**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 18**
**காலம் 45 நிமிடம்**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுதல்**

1. இளவழகன் வந்தான். இது ........................தொடர்.
   1. குறிப்பு 2. வெளிப்படை 3. எதுவுமில்லை.
2. மாடு என்னும் சொல் ....................... ஆகும்.
   1. உயர்திணைப்பொதுப்பெயர் 2. அஃறிணைப் பொதுப்பெயர் 3. விரவுப்பெயர்
3. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது.................குறிக்கும்
   1. பசு 2. காளை 3. கன்று
4. வடக்கு என்னும் திசைப்பெயரொடு பிற திசைகள் வந்து சேரும்போது..............
   1. நிலைமொழி ஈறு நீங்கும் 2. நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும் 3. வருமொழி முதல் கெடும்.
5. மேற்கு நாடு .......................எனச் சேரும்.
   1. மேற்கு நாடு 2. மேநாடு 3. மேனாடு
6. கருமை குழி என்பது .............. எனும் விதிகளின் படி புணரும்.
   1. ஆதிநீடல், இனமிகல் 2. தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ ஆதல் 3.ஈறுபோதல், இனமிகல்

**கோடிட்ட இடம் நிரப்புதல்**

7. பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும்போது, பொம்மை......................செய்யப்.............. என வரும்.
8. அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்தால் ......................... தொடர் ஆகும்.
9. அன்பரசன் திருக்குறளைக் கற்றான். இத்தொடர் பிறவினையாக மாறும்போது, அன்பரசன் திருக்குறளை............................என வரும்.
10. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது...................................
11. தொழிலைக் குறிக்கும் சொல்................................
12. வினைமுற்று ..........................., .............................. என இருவகைப்படும்.
13. ஓர் எச்ச வினை ...............கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும்.
14. ஒரு பொருள் குறித்துவரும் சொற்களையே........என்பர்
15. ஒரு பொருட் பன்மொழிக்குச் சான்று...........................
16. இது செய்வாயா என்னும் வினாவிற்கு வயிறு வலிக்கும் எனக் கூறுவது.............விடை.
17. ஆடத் தெரியுமா என்னும் வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது..............விடை.
18. நன்னூல் கிடைக்குமா எனக் கடைக்காரரிடம் கேட்பது..........வினா.

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**ஒரு மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் இரண்டாம் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**கோடிட்ட இடம் /நிரப்புதல்**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 25**

**காலம் 45 நிமிடம்**

<u>தொடரை மாற்றி அமைக்க</u>

1. திருக்குறளை அனைவரும் அறிவர் - வினாத்தொடாக மாற்றுக.
2. இமயமலை மிகவும் உயரமானது - உணர்ச்சித் தொடராக மாற்றுக.
3. கிளி கல்லால் அடிபட்டது - உணர்ச்சித் தொடராக மாற்றுக.
4. வாரியார், "குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்கவேண்டும்'' என்றார் - அயற்கூற்றாக்குக.
5. நேற்று புயல் வீசியது. மரங்கள் சாய்ந்தன - கலவைத்தொடராக மாற்றுக.

<u>சந்திப்பிழையற்ற தொடராக மாற்றுக.</u>

6. கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்

<u>ஒருமை பன்மை பிழை நீக்குக</u>.

7. அவன் கவிஞன் அல்ல.

<u>பிறமொழி சொல்லற்ற தொடராக்குக.</u>

8. அவர்களிருவர்க்கும் இடையே விவாதம் நடந்தது.

<u>வழுஉச் சொல்லற்ற தொடர் ஆக்குக.</u>

9. வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே.

<u>தொகைச் சொற்களை விரித்தெழுதுக.</u>

10. இருவினை
11. முத்தமிழ்
12. மூவேந்தர்
13. நானிலம்
14. ஐந்திணை

<u>உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.</u>

15. நான் (கு) மழையில் நனைவது பிடிக்கும்.
16. அண்ணன், தம்பி வீடு (கு) சென்றார்
17. மாணவர்கள் (ஐ) வட்டமாக உட்சாரச் செய்க.
18. நான் (கு) திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
19. வேல்விழி திருக்குறள் (ஐ) படித்தாள்.

<u>இளமைப் பெயர்களைப் பொருத்துக</u>

20. ஆடு - கன்று
21. மான் - பிள்ளை
22. கீரி - குட்டி
23. சிங்கம் - குஞ்சு
24. கோழி - குருளை

<u>நிறுத்தற்குறி இடுக.</u>

25. சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மை காக்கும்

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**ஒரு மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் இரண்டாம் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**மொழித்திறன் பயிற்சி**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 32**

**காலம் 45 நிமிடம்**

<u>உவம உருபு இணைத்த எழுதுக</u>

1. மான் ..........மருளும் பார்வை (உரிய உவமை உருபு இணைத்து எழுதுக)

<u>தொகை உவமைகளை விரிவுவமைகளாக மாற்றி எழுதுக.</u>

2. மதிமுகம்
3. பவளவாய்

<u>விரிவுவமைகளைத் தொகையுவமையாக மாற்றக.</u>

4. கயல்விழிபோன்ற விழி
5. கிளி போன்ற மொழி

<u>அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.</u>

6. மலப்பாதம் (உருவகமாக)
7. விழிக்கயல் (உவமையாக)
8. கனிவாய் (உருவகமாக)
9. பல்முத்து (உவமையாக)
10.

<u>பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.</u>

11. ஷேத்திரங்கள்தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.ஷ
12. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
13. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
14. நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
15. நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்.

<u>உவமைகளைச் சொற்றொடரில் அமைக்க</u>

16. பசுமரத்தாணிபோல
17. குன்றின் மேலிட்ட விளக்குப்போல
18. அனலிடைப்பட்ட புழுவைப்போல
19. கடலில் கரைந்த பெருங்காயம் போல
20. இலவு காத்த கிளி போல
21. காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல
22. அடியற்ற மரம்போல
23. மடைதிறந்த வெள்ளம்போல
24. கல்மேல் எழுத்துபோல
25. அத்தி பூத்தாற்போல
26. மழைகாணாப் பயிர்போல
27. மலரும் மணமும்போல
28. வேலியே பயிரை மேய்ந்ததுபோல
29. கீரியும் பாம்பும்போல
30. உள்ளங்கை நெல்லிக்கனிபோல
31. கிணற்றுத்தவளைபோல
32. நிலவும் வானும்போல

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**ஒரு மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் இரண்டாம் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**மொழித்திறன் பயிற்சி**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 32**

**காலம் 45 நிமிடம்**

மரபுத் தொடர் பொருளறிக

1. ஆயிரங்காலத்துப் பயிர்
2. எடுப்பார் கைப்பிள்ளை
3. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது
4. அவலை நினைத்து உரலை இடித்தல்
5. முதலைக் கண்ணீர்
6. அவசரக் குடுக்கை
7. ஆகாயத்தாமரை
8. கம்பி நீட்டல்
9. தாளம்போடுதல்
10. கானல்நீர்
11. பஞ்சாய்ப் பறத்தல்
12. குட்டிச் சுவர்
13. கொட்டியளத்தல்
14. வல்லினம் மிகும் இடம் ஒன்றனுக்குச் சான்று தருக
15. வல்லினம் மிகா இடம் ஒன்றகுக்குச் சான்று தருக.

ஒருமை பன்மை நீக்குக

16. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப்படக்கருவி என்ற கருவி பயன்படுகின்றன.
17. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் இருக்கின்றது.
18. இன்று பேருந்துகள் ஓடாது.
19. ஓர் அணில் மரத்தில் ஏறின.
20. நான் வாங்கிய நூல் இது அல்ல.

தொடருக்கு ஏற்ற வினா அமைக்க.

21. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
22. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இருகண்களாக எம்.ஜி.ராமச்சந்திரன் கருதினார்.

மரபுத் தொடருக்கேற்ற பொருளைத் தேர்நதெடுத்து எழுதுக.

23. இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர்.
    1. வாழை பயிரிடுதல் 2. பரம்பரை பரம்பரையாக 3. பயிர்த்தொழில்
24. எம்.ஜி.ராமச்சந்திரன் திரைவானில் கொடி கட்டிப் பறந்தார்.
    1. தனிப்புகழோடு விளங்கினார் 2. கொடி கட்டுதல் 3. கனவு காணுதல்

மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக

25. சீட்டுக் கிழிந்து விட்டது
26. முதலைக்கண்ணீர்
27. கயிறு திரித்தல்

சொற்களுக்கு இருபொருள் எழுதுக

28. ஆறு ..................., ......................
29. திங்கள் ......................, .......................
30. மாலை ......................., .....................
31. நகை .........................., .....................
32. மெய் .........................., ......................

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**ஒரு மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் இரண்டாம் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**மொழித்திறன் பயிற்சி**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 18**
**காலம் 45 நிமிடம்**

<u>தமிழில் எழுதுதல்</u>

1. டாடி, வர்ற சண்டெ எனக்குப் பர்த்டே, நீங்க இன்னும் எனக்குப் பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச்சொல்லிக் கால் பண்ணியிருக்கேன்.
சண்டெ வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்கு. டோன்ட் வொர்ரி, டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹேப்பிதானே.”

2. சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே? வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனால்தான் லேட். சரி...சரி..பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கெட் கிடைச்சுதா? பஸ் டென் தேர்ட்டிக்கு வரும். லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

<u>சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக</u>

3. தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளையும் காணமுடியும்.
4. அறிவு ஒளிபெற அங்கு சோதி தரிசன புதுமையை புகுத்தினர்.
5. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.
6. மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகின்றனது.

<u>சூழல் வினா விடை</u>

7. மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கின்றான். சில நாட்களாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்ற பெற்றோர் நினைக்கின்றனர்.

**பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?**
**நாம் எப்படிப்பட்ட நண்பர்களோடு நட்புகொள்ள வேண்டும்?**
**இச்சூழலில் பயன்படுத்தவேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?**

8. இரண்டு நாள் பெய்த மழையின் காரணமாக, அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால் கதிரவனின் வகுப்புத் தோழர்கள், அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால் தன்னைக் கண்டிப்பார்கள் என்று கதிரவனுக்குத் தெரியும். திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்று அவன் நினைக்கிறான்.

**இந்நிலையில் கதிரவன் தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவான்?**
**கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?**

9. பதினொன்றாம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகிறது. தேவி அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்துவிட்டன. ஆனால் அவள் பெற்றோர் அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.. “நான்சொன்னது சொன்னதுதான். நீ படித்தது போதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்யவேண்டியதுதான்.“ என்று கூறியவாறு அவளுடைய தந்தை வெளியே சென்றுவிட்டார். “அப்பா உனக்கு நல்லதுதான் செய்வார். அப்பாவின் பேச்சைக் கேள்“ என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள் தேவி.

**இத்தகைய நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள்?**
**உங்களுக்கு இப்படியொரு நிலை ஏற்பட்டால் நீங்கள் எப்படி தீர்வு காண்பீர்கள்?**
**இச்சூழலில் பயன்படுத்தவேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?**

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**குறுவினா மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் முதல் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**மொழித்திறன் பயிற்சி**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 20**

**காலம் 45 நிமிடம்**

1. ஏலாதி நூற்குறிப்பு - வரைக.
2. கணிமேதாவியார் - குறிப்பு எழுதுக.
3. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?
4. கம்பர் - சிறு குறிப்பு வரைக.
5. கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை? யாருக்குக் கொண்டு சென்றான்?
6. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான்?
7. குகனின் வேண்டுகோள் யாது?
8. அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம் - யார், யாரிடம் கூறியது?
9. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?
10. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார்?

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**குறுவினா மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் முதல் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**மொழித்திறன் பயிற்சி**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 18**

**காலம் 45 நிமிடம்**

1. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன?
2. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார்?
3. மூத்த திருநாவுக்கரசுக்கு நேர்ந்ததென்ன?
4. திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசரை எங்ஙனம் உயிர்த்தெழச் செய்தார்?
5. நும்பேர் எழுதாதே வேறொருவர் பெயர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்? - யார், யாரிடம் கூறியது?
6. இப்போது இங்கு அவன் உதவான் - யார், யாரிடம் கூறியது?
7. வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை?
8. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடுதூது கூறுவன யாவை?
9. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?

**காலாண்டு தேர்வுப் பகுதி**
**குறுவினா மதிப்பெண் வினாவிடை**
**தமிழ் முதல் தாள்**
**பயிற்சித்தாள் /தேர்வுத்தாள்**
**மொழித்திறன் பயிற்சி**

**பயிற்சித்தாள் -** **மதிப்பெண் - 20**

**காலம் 45 நிமிடம்**

1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய. இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?
2. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?
3. தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.
4. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?
5. ஒருமொழி நிலைபெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை?
6. மொழிமாற்றம் என்றால் என்ன?
7. கல்விப்படங்கள் வாயிலாக நாம் அறிவன யாவை?
8. திரைப்படச்சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை?
9. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?
10. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

# பத்தாம் வகுப்பு தமிழ்
## காலாண்டு பயிற்சித் தாள்

மதிப்பிற்குரிய தமிழ் ஆசிரியர்களுக்கு,

வணக்கம். இத்துடன் பயிற்சித்தாள்களை இணைத்துள்ளேன். இப்பயிற்சித்தாள்களை அச்சு எடுத்து, ஒவ்வொரு தாளையும் ஒவ்வொரு பாடவேளைக்குப் பயன்படுத்துங்கள். அதற்கு முன்பு, கற்றல் குறைவான மாணவர்களுக்கு என இரண்டு நகல் எடுத்து, ஒன்றை வீட்டுப் பாடமாக எழுதி வரச் செய்யுங்கள். இரண்டாவது நகலைத் தேர்வுத்தாளாகப் பயன்படுத்துங்கள். கண்டிப்பாக மாணவர் தேர்ச்சி அடைவார்.

அன்புடன்

ரா. தாமோதரன், அ.மே.நி.பள்ளி, மெலட்டூர் 614 301. தஞ்சாவூர் மாவட்டம்.

காலாண்டுத் தேர்வில் மாணவர் தேர்ச்சி அடைய, பயிற்சித் தரும் பகுதிகள்

தமிழ் முதல் தாள்

| | | |
|---|---|---|
| 1. | விடை தேர்க | 6 |
| 2. | கோடிட்ட இடம் நிரப்புக | 6 |
| 3. | பொருத்துக | 4 |
| 4. | வினாவாக மாற்றுக | 4 |
| 5. | குறுவினா (செய்யுள்) | 10 |
| 6. | குறுவினா (உரைநடை) | 10 |

தமிழ் இரண்டாம் தாள்

| | | |
|---|---|---|
| 1. | கடிதம் - விண்ணப்பம் | 10 |
| 2. | படிவம் | 5 |
| 3. | ஒரு மதிப்பெண் | 10 |
| 4. | மொழிப்பயிற்சி | 10 |
| 5. | ஆங்கிலச் சொல், பழமொழி | 5 |
| 6. | சூழல் வினா - விடை | 5 |
| 7. | அலகிடுதல் | 5 |
| 8. | அணி | 5 |